(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.NO.129/2019 PW 1

Name கிருஷ்ணய்யா

Father's Name

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

08.09.2023.

குறுக்கு விசாரணை

பிரதிவாதி கிருஷ்ணமூரத்தி என்னுடன் படித்தவர் என்றால் சரிதான். தெலுங்கு வழி கல்வி படித்தோம் என்றால் சரிதான். தமிழ் எழுத படிக்க பிரதிவாதி தெரியுமா என்று எனக்கு தெரியாது. நான் வட்டிக்கு விடும் தொழில் செய்யவில்லை. எனக்கு நம்பிக்கையானவர்க்கு மட்டும் பணம் கொடுப்பேன். நான் மாந்தோப்பு குத்தகைக்கு எடுத்து பணம் சம்பாதித்து வருகிறேன் என்றால் சரிதான். பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி மற்றும் அவரது சகோதரர் ஸ்ரீஅரி ஆகியோர்களுடன் தாவா சொத்து மாந்தோப்பை குத்தகைக்கு எடுக்க ஒப்பந்தம் போட்டேன் என்றால் சரிதான். காண்பிக்கப்பட்ட குத்தகை ஒப்பந்ததின் நகல் நான் போட்ட குத்தகை ஒப்பந்தம் என்றால் சரிதான். அது பிவாசாஆ 1. அந்த ஒப்பந்தம் முன்னிலைக்கு ரூ.2,25,000 முன்பணமாக நான் பிரதிவாதிகளுக்கும் அவரது சகோதரர்களுக்கும் கொடுத்தேன் என்றால் சரியல்ல. ரூ.1 லட்சம் தான் கொடுத்தேன். வருடத்திற்கு ரூ.85,000 குத்தகை தொகை பேசியிருந்ததால் மறுவருடம் மீதி தொகையை கொடுக்கயிருந்தேன். பிறகு எங்களுக்குள் கருத்துவேறுபாடு ஏற்பட்டதால் குத்தகை ஒப்பந்ததை திரும்ப கொடுத்து நான் கொடுத்த பணத்தை திரும்ப பெற்றுவிட்டேன்.(சாட்சி இந்த விவரங்களை தாமாக கூறினார்.) மொத்த குத்தகை தொகை ரூ.4,25,000 என்றாலும் ரூ.2,25,000 முன்பண தொகை போக மீதி தொகையை ஜனவரி 2017ல் கொடுக்கஒப்புக்கொண்டு அதுபோல் தராத காரணத்தினால் தான் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 2016 ஜீலை மாதம் எனக்கு சேரவேண்டிய

தொகையை பிரதிவாதி கொடுத்துவிட்டார். மாந்தோப்பு பிரதிவாதி அவரது சகோதரருக்கு கூட்டுபாத்தியம் என்றால் சரிதான். பிரதிவாதி மீது நான் பணம் திரும்ப செலுத்த கோரி திருத்தணி சார்பு நீதிமன்றத்தில் ஒஎஸ் 74/2019, 77/2019 நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவரது சகோதரர் ஸ்ரீஅரியின் மகன் எதிராக ஒஎஸ் 75/2019 என்கின்ற வழக்கு நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்குடன் சேர்த்து மொத்தம் ரூ.17,70,000 தொகை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து வழக்குகளிலும் 2017-2018ல் புரோநோட் மற்றும் அடமானம் பத்திரம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு மேற்படி தொகை கொடுப்பதற்கு போதிய வருமானம் உள்ளது என்பதை காண்பிக்க ஆதாரம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வருமானம் வரி கணக்கு செலுத்திவருகிறேன். நான் பிரதிவாதி சகோதரர் வீட்டிற்கு சென்று பிரச்சனை செய்ததற்காக என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் அது பொய் புகார் ஆகும். அந்த வழக்கிலிருந்து வெளிவரவேண்டும் என்றும் அதற்கு பழிவாங்கும் எண்ணத்துடன் இந்த வழக்கு நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பலமுறை பணம் திருப்பி கொடுக்க பிரதிவாதியை கேட்டுள்ளேன். 31.08.2017புரோநோட்டை அடிப்படையாக கொண்டு ஒஎஸ் 74/2019 என்கின்ற வழக்கில் பிரதிவாதி வட்டி கொடுத்ததில்லை என அந்த வழக்கில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஒஎஸ் 77/2019 என்கின்ற வழக்கிலும் பிரதிவாதி வட்டி கொடுக்கவில்லை என கூறியுள்ளேன் என்றால் அந்த வழக்கு எனது மனைவி தாக்கல் செய்தது. வட்டி கொடுக்கவில்லை என்றால் சரிதான். ரூ2லட்சத்திற்கு ஏற்கனவே பிரதிவாதி 13.10.2016ல் அடமானம் போட்டுக்கொடுத்தார் என்றால் சரிதான். அந்த அடமானத்தை அவர் மூட்டுவிட்டார். எப்போது பணம் கொடுத்தார் என்றால் ஞாபகமில்லை. பணம் கொடுக்க 10 நாட்களில் இந்த அடமான பத்திரம் போடப்பட்டது என்றால் பிரதிவாதி பணம் கேட்டார் கொடுத்ததினால் இந்த பத்திரம் போட்டார். வீட்டு செலவிற்காக பணம் கேட்டார். பிரதிவாதி மீது

நம்பிக்கை இருந்ததால் கொடுத்தேன். பிரதிவாதி மதுபோதையில் இருந்தபோது அவரிடமிருந்து கையொப்பம் வாங்கிகொண்டு அடமானம் பத்திரம் எழுதி வாங்கபட்டது என்றால் சரியல்ல. அடமானம் பத்திரம் பத்திர தாள்களை அன்றே வாங்கி அன்றே எழுதி பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. மறுநாள் தான் பதிவு செய்தோம். நான்கு நாட்களுக்கு முன்பாக பத்திரத்தை வாங்கும் பிரதிவாதியிடம் போதையில் கையொப்பம் வாங்கி கொண்டு பிறகு பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. வில்லங்க சான்று எதுவும் தாவா சொத்திற்கு பெறவில்லை. கனரா வங்கியில் பிரதிவாதி அடமானம் வைத்துள்ள விவரம் எனக்கு பிரதிவாதி சொல்லி தெரியும். அதன் காரணமாக நான் வெறும் ரூ2லட்சம் மட்டும் தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து ரூ5லட்சத்திற்கு மேலே மதிப்பு போகாது என்றாலும் பிரதிவாதியை ஏமாற்றவேண்டும் என்று நோக்கத்தில் ஆவணத்தை ஏற்படுத்தி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.